அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் – மேயர் பிரியா ராஜன் தலைமையில்

சென்னை கிழக்கு மாவட்டத்தில் - மக்கள் தேவைகளைக் கண்டறியும் பயணம் தொடங்கியது!

வார்டு 70,74–க்குட்பட்ட பகுதிகளில் வீதி,வீதியாக மக்களுடன் சந்திப்பு! கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை!

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மாவட்டத்திற்குட்பட்ட 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், கழக நிர்வாகிகள் ஆகியோருடன் வீதி வீதியாக சென்று பொதுமக்களை சந்தித்து, மக்கள் தேவைகளை கண்டறியும் பயணத்தின் தொடக்கமாக சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா ராஜன் தலைமையில் நேற்று (02.01.2025) கொளத்தூர் கிழக்கு பகுதி, திரு.வி.க. நகர் மண்டலம், 74வது வட்டத்தில் உள்ள ஆதிசேஷா நகரில் தொடங்கி வைக்கப்பட்டு, மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் மண்டலக் குழுத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோருடன் சந்திரயோகி சமாதி தெருவில் உள்ள மக்களை நேரடியாக சந்தித்து அவர்களின் தேவைகளை தீர்க்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில், மண்டல அலுவலர் முருகன், கழக நிர்வாகிகள் சந்தானம், ஆனந்த், வசந்தகுமார், செல்வம் மற்றும் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மாவட்டத்திற்குட்பட்ட 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், கழக நிர்வாகிகள் ஆகியோருடன் வீதி வீதியாக சென்று பொதுமக்களை சந்தித்து, மக்கள் தேவைகளை கண்டறியும் பயணத்தின் தொடக்கமாக சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா ராஜன் தலைமையில் நேற்று (02.01.2025) கொளத்தூர் கிழக்கு பகுதி, திரு.வி.க. நகர் மண்டலம், 70வது வட்டத்தில் உள்ள நேரு திருமண மண்டபத்தில் தொடங்கி வைக்கப்பட்டு, மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் மண்டலக் குழுத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோருடன் மயிலப்பன் தெரு, அன்னை சத்யா நகர், பங்காரு தெரு மற்றும் பில்கிங்ஸ்டன் சாலைகளில் மக்களை நேரடியாக சந்தித்து அவர்களின் தேவைகளை தீர்க்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பகுதி கழகச் செயலாளர்கள் ஐசிஎப்.வ.முரளிதரன், எ.நாகராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் .கே.சந்துரு, சி.மகேஷ் குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், மாமன்ற உறுப்பினர் திருமதி ஸ்ரீதணி, வட்டச் செயலாளர்கள் டி.சந்திரசேகர், பா.அன்பரசு மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை, ஜன. 3- முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 44 மாநகராட்சி வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களில் மக்கள் தேவைகளை கண்டறியும் பயணத்தின் தொடக்கம் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா ராஜன் தலைமையில் வார்டு 70 மற்றும் 74க்குட்பட்ட பகுதிகளில் நேற்று தொடங்கி வைக்கப்பட்டு, பொதுமக்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், மாவட்டத்திற்குட்பட்ட 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், கழக நிர்வாகிகள் ஆகியோருடன் வீதி வீதியாக சென்று பொதுமக்களை சந்தித்து, மக்கள் தேவைகளை கண்டறியும் பயணத்தின் தொடக்கமாக, சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா ராஜன் தலைமையில் நேற்று (02.01.2025) கொளத்தூர் கிழக்குப் பகுதி, வி.க. நகர் மண்டலம், 70வது வட்டத்தில் உள்ள நேரு திருமண மண்டபத்தில் தொடங்கி வைக்கப்பட்டு, மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் மண்டலக் குழுத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோருடன் மயிலப்பன் தெரு, அன்னை சத்யா நகர், பங்காரு தெரு மற்றும் பில்கிங்ஸ்டன் சாலைகளில் மக்களை நேரடியாக சந்தித்து அவர்களின் தேவைகளை தீர்க்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் 74வது வட்டத்தில் உள்ள ஆதிசேஷா நகரில் இந்நிகழ்வினைத் தொடங்கி வைத்து, சந்திரயோகி சமாதி தெருவில் உள்ள மக்களை நேரடியாக சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களுடன் இணைந்து, மக்களின் கோரிக்கை அறிந்து செயல்படுமாறு அறிவுறுத்தியுள்ளார். அதனடிப்படையில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 44 மாநகராட்சி வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களில் ஆய்வு தொடங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் தொடங்கி வைத்துள்ளார்கள். இந்த ஆய்வு பணியின் போது, அந்தப் பகுதியைச் சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழகச் செயலாளர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைக் குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகளின் அடிப்படையிலான துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்து செயல்பட்டு, தெருக்கள் வாரியாக, வீடுகள் வாரியாக சென்று பொதுமக்களின் கோரிக்கைகள் நிவர்த்தி செய்யும் வகையில் இந்த ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

நேற்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது, கைவிடப்பட்ட வாகனங்களை அகற்றுதல், மின்பெட்டிகளை உயர்த்தி அமைத்தல், மின்ஒயர்களை சரிசெய்தல், கட்டிடக் கழிவுகள் மற்றும் குப்பைகள் அகற்றுதல், பெயர்ப்பலகைகளை மாற்றுதல், இங்குள்ள குழந்தைகள் மையத்தில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து, அவர்களின் தேவைகள் நிவர்த்தி செய்தல், கால்வாயில் சுற்றுச்சுவரை உயர்த்தி அமைத்தல் உள்ளிட்ட பொதுமக்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இவ்வாறு தெரிவித்தார்.

சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் வார்டு-70க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது, மின் ஒயர்களை அப்புறப்படுத்துதல், மின் பெட்டிகளை உயர்த்தி அமைத்தல், சாலையோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கைவிடப்பட்ட வாகனங்களை அப்புறப்படுத்துதல், சாலையோரங்களில் உள்ள கட்டிடக் கழிவுகள் மற்றும் குப்பைகளை அகற்றுதல் குறித்த கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார். மேலும், அங்குள்ள அங்கன்வாடி மையத்தினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அங்குள்ள குறைகளை கண்டறிந்து தேவைகளை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

வார்டு-74க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது, புதிய குடிநீர் குழாய் அமைத்தல், பழைய கான்கிரீட் சாலையை அகற்றிவிட்டு புதிய தார் சாலை அமைத்தல், தேங்கியுள்ள குப்பைகளை அகற்றுதல்,

மின்பெட்டிகளை உயர்த்தி அமைத்தல் உள்ளிட்ட பொதுமக்களின் கோரிக்கைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில் பகுதி கழகச் செயலாளர்கள் ஐசிஎப்.வ.முரளிதரன், எ.நாகராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.சந்துரு, சி.மகேஷ் குமார்,

மண்டலக் குழுத்தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மண்டல அலுவலர் ஏ.எஸ். முருகன், மாமன்ற உறுப்பினர் திருமதி ஸ்ரீதணி, வட்டச் செயலாளர்கள் டி.சந்திர சேகர், பா.அன்பரசு. கழக நிர்வாகிகள் சந்தானம், ஆனந்த், வசந்தகுமார், செல்வம் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அரசு போக்குவரத்து கழக பேருந்துகளில் டிசம்பரில்

ஆன்லைனில் முன்பதிவு செய்து பயணித்த 13 பயணிகளுக்குப் பரிசு!

குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டனர்!

சென்னை, ஜன. 03- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில், ஆன்லைன் முன்பதிவு திட்டத்தில், அனைத்து நாட்களிலும் பயணம் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், டிசம்பர்-2024 மாதத்திற்கான குலுக்கல் முறையில் பதிமூன்று (13) பயணிகளை மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) மற்றும் பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு மேலாண் இயக்குநர் (மு.கூ.பொ) டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், நேற்று கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்தார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொலைதூர பேருந்துகளில், பொதுமக்கள் எவ்வித சிரமுமின்றி பயணம் செய்ய ஏதுவாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் வலைதளமான https://www.tnstc.in, TNSTC செயலி etc., மூலம் பயணச் சீட்டு முன்பதிவு செய்யும் முறை செயல்பட்டு வருகின்றது.

வார விடுமுறை நாட்கள் மற்றும் பண்டிகை நாட்களை தவிர்த்து இதர நாட்களில் முன்பதிவு செய்து பயணிகள் எளிதாக பயணம் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு மாதத்திலும் வார விடுமுறை மற்றும் பண்டிகை நாட்களை தவிர்த்து, இதர நாட்களில் பயணிப்பதற்காக, முன்பதிவு செய்யும் பயணிகளில் மூன்று பயணிகள் கணினி மூலம் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, மூன்று பயணிகளுக்கு தலா ரூ.10,000/- வழங்கும் திட்டம் ஜனவரி-2024 முதல் தொடங்கப்பட்டு, வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் அதிக எண்ணிக்கையிலான பயணிகள் பயனடைய வேண்டும் என்ற நோக்கில், ஜூன்-2024 முதல் 13 பயணிகளை கணினி மூலம் குலுக்கல் முறையில் தேர்வு செய்து, முதல் மூன்று பயணிகளுக்கு தலா ரூ.10,000/- மும், இதர பத்து பயணிகளுக்கு தலா ரூ.2,000/- வழங்கிட முடிவு செய்யப்பட்டு, அமுல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது, 2024 நவம்பர் மாதம் முதல், வாரத்தின் அனைத்து நாட்களிலும் பயணம் செய்ய முன்பதிவு செய்யும் அனைத்து பயணச்சீட்டுகளும் மாதாந்திர குலுக்கல் முறைக்கு தகுதி பெறும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

வ. எண்	பயணச்சீட்டு (PNR) எண்	தேர்ந்தெடுக்கப்பட்ட பயணியின் பெயர்	ரொக்கப்பரிசு (ரூ.பாய்)
1)	T61148034	திரு.விஷ்ணுபரதன்	ரூ.10,000/-
2)	T61348661	திருமதி. ரின்சியா	ரூ.10,000/-
3)	T61797044	திருமதி. ஆதிர்ஷ்டலட்சுமி	ரூ.10,000/-
4)	L62142170	திரு.விமல்ராஜ்	ரூ.2,000/-
5)	L62222795	திரு.கௌதம் அர்ஜுனன்	ரூ.2,000/-
6)	N61766450	வவ்ரா	ரூ.2,000/-
7)	T61310776	திரு.கே.சீனாட்சி சுந்தரம்	ரூ.2,000/-
8)	T61440402	திரு.ஜெயன்	ரூ.2,000/-
9)	T61454061	திரு.ரகு	ரூ.2,000/-
10)	T61500011	திரு.ஈஸ்வர பிள்ளை	ரூ.2,000/-
11)	T61728041	திரு.பன்தைந்த்	ரூ.2,000/-
12)	T61969472	திரு.ஒய்.இம்பானுவேல் பிரவின்	ரூ.2,000/-
13)	T62092453	திரு.சிபி ராஜ்	ரூ.2,000/-

இதனை நடைமுறைபடுத்தும் வகையில், டிசம்பர்-2024 மாதத்திற்கான பதிமூன்று (13) வெற்றியாளர்களை (பயணிகள்) கணினி குலுக்கல் முறையில், மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) மற்றும் பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு மேலாண் இயக்குநர் (மு.கூ.பொ) டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், நேற்றைய தினம் (02.01.2025) தேர்வு செய்தார்.

டிசம்பர்-2024 மாதத்திற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட 13 பயணிகளுக்கு பரிசுகள் விரைவில் வழங்கப்படும்.

கலைஞர் மகன் தந்த புதுமை கண்ணாடிப் பாலம்!

விண்ணில் ஒரு வானவில்லாய்க்
கண்ணாடிப் பாலம்!

விவேகத்திலிருந்து பேரறிவுக்கு
வியப்புடன் அழைத்தேகும்
கண்ணாடிப் பாலம்

உள்நாடிப் பார்க்கவைக்கும்
உளவியலின் மேதையினைக்
கண்ணாரக் காண்பதற்குக்
கண்ணாடிப் பாலம்

காலத்துக்குப் பாலமிட்ட
ஞானவிளக்கு ஆனவனைக்
கை தொட்டு வணங்குதற்குக்
கண்ணாடிப் பாலம்

குமரியெனும் தமிழ்த்தாயின்
மூத்த மகன் இவனென்று
கொண்டாடும் பெரியவனைக்
கண்டு மலரிட அழைக்கும்
கண்ணாடிப் பாலம்

வையம் வணங்கும் எங்கள்
அய்யன் திருவடிக்கு
அன்போடு வழிகாட்டும்
கண்ணாடிப் பாலம்

முழங்கும் கடல்நடுவே
விளங்குகின்ற வள்ளுவனே !
அங்கிருந்தபடியே நீ
அனைத்துலக மக்களுக்கும்
அறம் சொல்க
நாயகனே.

கவிஞர்
சிற்பி பாலசுப்பிரமணியம்